


# சித்திரக் கதைகளில் இசைக் கலைஞர்கள்!

தொகுப்பு : சாருகேசி

இளைய தலைமுறையினரின் நேரமின்மையை நன்கு அறிந்து, அவர்கள் சார்பாக கலைஞர்களின் வாழ்க்கை வரலாறுகளைப் படித்து, தேவையானதை எல்லாம் கோர்வையாக ஒரு கதை மாதிரி சொல்ல ஆரம்பித்தார் லக்ஷ்மி தேவ்நாத். அதுவும் எப்படி? சித்திரக் கதைகளாக!

எந்த நிகழ்ச்சி எல்லாம் ஒரு கலைஞரின் வாழ்க்கையில் முக்கியமானதாக அவருக்குப் பட்டதோ, அதையெல்லாம் தொகுத்து, ஓவியரிடம் உட்கார்ந்து விவாதித்து, பார்க்கவும் படிக்கவும் தெரிந்து கொள்ளவும் ஏற்ற வகையில் நம் நினைவில் நிற்கும் கர்நாடக இசைக் கலைஞர்களின் வாழ்க்கையை சுவையாகத் தந்திருக்கிறார்.

முதலில் அவர் வழங்கத் தொடங்கியது ஆங்கிலத்தில் தான். எம்.எஸ். சுப்புலக்ஷ்மி, ஜி.என்.பி. என்று அழைக்கப் படும் ஜி.என். பாலசுப்ர மணியம், மதுரை மணி அய்யர், டி. பிருந்தா என்று அந்த நாளையக் கலைஞர்களை அறிமுகம் செய்தவர், சமீபத்தில் வெளியிட்டிருக்கும் சித்திரக் கதை மகாராஜா சுவாதித் திருநாள் பற்றியது. பல பிரபலமான பாடல்களை இயற்றித் தந்த சுவாதித் திருநாள் மகாராஜாவின் புத்தகத்தோடு, அவர் அறிமுகப்படுத்தியிருக்கும் புதிய நூல், ஆங்கிலத்தில் வெளியான எம்.எஸ். சுப்புலக்ஷ்மியின் சித்திரக் கதையின் தமிழ் வடிவம். மொழி பெயர்த் தவர், பல நூல்களை ஆங்கிலத்திலிருந்து தமிழிலும், தமிழிலிருந்து ஆங்கிலத்திலும் வாசகர்களுக்குத் தந்த பத்மா நாராயணன். ''எம்.எஸ்.அம்மா கதையைப் போலவே, மதுரை மணி அய்யர், ஜி.என்.பி. பிருந்தாம்மா ஆகியோரின் சித்திரக் கதைகளும் தமிழில் தயாராகி வரு கின்றன. வாசகர்களின் ஆதரவு மட்டும் இருந்து விட்டால், அந்த நாளைய இசைக் கலைஞர்களின்வாழ்க்கையை இம்மாதிரி சித்திரக் கதை களாக சுவாரசியமாக வழங்க முடியும்!'' என் கிறார் லக்ஷ்மி தேவநாத்.

சமீபத்தில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் இந்த இரண்டு நூல்களையும் லக்ஷ்மி தேவ்நாத் வெளியிட கோபிகா வர்மா பெற்றுக் கொண்டார்கள். நந்தினி ரமணி சிறப்பு விருந்தினராக நிகழ்ச்சியில் பங்கேற்க, காயத்ரி வெங்கடராகவன், எம்.எஸ்.அம்மாவின் பிரபல தமிழ்ப் பாடல்களைப் பாடினார். எம்.எஸ். புத்தகத்துக்கு மத்திய கலாசாரத்துறையின் ஆதரவு கிடைத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

லக்ஷ்மி தேவ்நாத்தின் 'பூர்வா' ஆழ்வார்களின் கதையை இளைய தலைமுறை விரும்பும் புதிய வகையில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆங்கிலத்தில் மிகுந்த வரவேற்பைப் பெற்ற இந்த நூல் இப்போது தமிழில் வெளியாகவிருக்கிறது. லக்ஷ்மி தேவ்நாத் எழுதிய, வயலின் மேதை லால்குடி ஜெயராமன் வாழ்க்கை வரலாற்றை ஹார்ப்பர் காலின்ஸ் பதிப்பகம் வெளியிட்டிருக்கிறார்கள். அதுவும் விற்பனையில் சக்கைப் போடு போடுகிறதாம்! ●